1996 பிப்ரவரி 28]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராகிய நான் 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (பத்தாவது பேரவை) அரசு உறுதிமொழிக் குழுவின் 32 மற்றும் 33-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை தமிழக அரசின் உறுதிமொழிக் குழுத் தலைவராக நியமித்து எனக்கு சிறப்பான வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கும், தாங்கள் என்னை நியமிக்கின்ற அளவிற்கு ஒத்துழைப்பு கொடுத்த தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், அரசு உறுதிமொழிக் குழு 23 மாவட்டங்களிலும் சுற்றுப் பயணம் செய்து உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. ஜானகிராமன் அவர்களுக்கும், இணைச் செயலாளர், துணைச் செயலாளர் மற்றும் சட்டமன்றப் பேரவை அலுவலர்களுக்கும், இதற்கெல்லாம் மேலாக சட்டமன்றக் குழுவிலே முழுமையாகப் பங்கெடுத்துக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அலுவலர்கள் மற்றும் மாநில அரசினுடைய அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வே. கண்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. வே. கண்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1995-96-ஆம் ஆண்டின், 86 முதல் 91-வது வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.